(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 செத்தெம்பர் 23, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 முதல் 6 வரையான பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2015 ஒற்றோபர் மாதம் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2015 ஒற்றோபர் மாதம் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— ஆலோசனைக் குழுக்களும் (சட்டவாக்க) நிலையியற் குழுக்களும்,—

(அ) கீழ்க்கண்டவாறு ஐம்பது (50) ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்படுமாக:-

1. பாதுகாப்பு பற்றிய ஆலோசனைக் குழு
2. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பற்றிய ஆலோசனைக் குழு
3. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் பற்றிய ஆலோசனைக் குழு
4. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு
5. சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு
6. வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் பற்றிய ஆலோசனைக் குழு
7. போக்குவரத்து பற்றிய ஆலோசனைக் குழு
8. சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பற்றிய ஆலோசனைக் குழு

9. வெளிநாட்டலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு
10. தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் பற்றிய ஆலோசனைக் குழு
11. நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் பற்றிய ஆலோசனைக் குழு
12. பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் பற்றிய ஆலோசனைக் குழு
13. அனர்த்த முகாமைத்துவம் பற்றிய ஆலோசனைக் குழு
14. தொழில்நுட்ப, தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில்வாய்ப்பு பற்றிய ஆலோசனைக் குழு
15. சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பற்றிய ஆலோசனைக் குழு
16. திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி பற்றிய ஆலோசனைக் குழு
17. உள்நாட்டலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு
18. சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவம் பற்றிய ஆலோசனைக் குழு
19. நிதி பற்றிய ஆலோசனைக் குழு
20. உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு
21. கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு
22. மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக் குழு
23. கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக் குழு
24. பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய ஆலோசனைக் குழு
25. மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பற்றிய ஆலோசனைக் குழு
26. கமத்தொழில் பற்றிய ஆலோசனைக் குழு
27. நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ பற்றிய ஆலோசனைக் குழு
28. கிராமியப் பொருளாதாரம் பற்றிய ஆலோசனைக் குழு
29. அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக் குழு
30. பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவம் பற்றிய ஆலோசனைக் குழு
31. புத்தசாசனம் பற்றிய ஆலோசனைக் குழு
32. நீதி பற்றிய ஆலோசனைக் குழு
33. வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பற்றிய ஆலோசனைக் குழு
34. துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு
35. காணி பற்றிய ஆலோசனைக் குழு
36. மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக் குழு
37. பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடகம் பற்றிய ஆலோசனைக் குழு
38. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு

39. வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பற்றிய ஆலோசனைக் குழு
40. கல்வி பற்றிய ஆலோசனைக் குழு
41. புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு
42. தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு
43. பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வாயு பற்றிய ஆலோசனைக் குழு
44. தென் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக் குழு
45. தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய ஆலோசனைக் குழு
46. விளையாட்டுத்துறை பற்றிய ஆலோசனைக் குழு
47. தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய ஆலோசனைக் குழு
48. ஆரம்பக் கைத்தொழில் பற்றிய ஆலோசனைக் குழு
49. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு
50. அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தகம் பற்றிய ஆலோசனைக் குழு

109 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்து அறிக்கையிடும் பொருட்டு ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் பதினொறு (11) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் கூட்ட நடப்பெண்ணாக மூன்று (03) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

(ஆ) முறையே “ஏ” நிலையியற்குழு மற்றும் “பீ” நிலையியற்குழு என்றழைக்கப்படும் இரண்டு சட்டவாக்க நிலையியற்குழுக்கள் நியமிக்கப்படுமாக.

ஒவ்வொரு குழுவும் பதினைந்து (15) உறுப்பினர்களைக் கொண்டிருப்பதோடு ஏதேனுமொரு குறித்த சட்டமூலமொன்று பரிசீலனைக்கு விடப்படுமிடத்து மேலதிகமாக பதினைந்து (15) உறுப்பினர்களுக்கு விஞ்சாத எண்ணிக்கையினை ஒவ்வொரு குழுவுக்கும் நியமிப்பதற்கு சபாநாயகர் அதிகாரமுடையவராக இருப்பாராக.

ஒவ்வொரு குழுவும் கூட்ட நடப்பெண்ணாக நான்கு (04) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு,— 124 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் மற்றும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் மேலும் பதினைந்து (15) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.32 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.32

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "புகையிரத பண்டகசாலை முற்பணம் - இலங்கை புகையிரத திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

| | விடயம் | மீளாய்வு |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 1,700,000,000 இலிருந்து ரூபா. 2,200,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 6,102,000,000 இலிருந்து ரூபா. 6,602,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 850,000,000 இலிருந்து ரூபா. 1,000,000,000 வரை |

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.09.14 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.33 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.33

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 24702 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவினங்கள் முற்பணக் கணக்கு - இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு" அளிக்கப்பட்டுள்ள விடயத்துக்காக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

| விடயம் | மீளாய்வு |
|---|---|
| (i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை. |
| (ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை. |
| (iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 20,000,000 இலிருந்து ரூபா. 25,000,000 வரை |
| (iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை |

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.09.14 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 34 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.34

2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனைக்கான (வெளியீட்டு உரிமையை பகிரங்கப்படுத்தல், மொழிபெயர்ப்பு உரிமையைக் கொள்வனவு செய்தல், மொழிபெயர்ப்புக் கட்டணம் மற்றும் பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவு உட்பட) முற்பணக் கணக்கு — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

| | விடயம் | மீளாய்வு |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 2,900,000,000 இலிருந்து ரூபா. 2,500,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | ரூபா. 1,500,000,000 இலிருந்து ரூபா. 2,250,000,000 வரை |

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.09.14 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.35 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.35

2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டகசாலை முற்பணக் கணக்கு - அரசாங்க தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

| | விடயம் | மீளாய்வு |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 170,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை |

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.09.14 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.36 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.36

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "முடிக்கப்பட்ட வேலை முற்பணக் கணக்கு - அரச தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

| | விடயம் | மீளாய்வு |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 260,000,000 இலிருந்து ரூபா. 450,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | மீளாய்வு செய்யப்படவில்லை. |

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.09.14 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட இச்சட்டத்தின் உப பிரிவில் உரிய முறையில் குறித்துரைக்கப்பட்ட நியமங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

## அட்டவணை

### 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி ஆண்டு 2014 தொடர்பில், 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

### குழுத்தொடர் இலக்கம். 01

2013 அம் ஆண்டின் இலக்கம் 36 ஐக் கொண்ட 8 வது பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, ரவி கருணாநாயக்க ஆகிய நான் நிதி அமைச்சர் என்ற வகையில் அரச அங்கீகாரத்தின் கீழ் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச ஊழியர்களுக்கான முற்பணக் கணக்குகளில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடய இலக்கங்களுக்கு அமைவான சட்டத்தின் மூன்றாம் உப பிரிவின் நிரல் இலக்கம் II மற்றும் IV இல் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச ஒதுக்கீட்டெல்லைகளையும் இலக்கம் III இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும் மாற்றியமைக்கின்றேன். 14001, 18201, 10501, 22801, 20801, 27701, 30301, 26901, 27001, 27201, 24201, 28601, 10201, 25601, 25801, 28201, 28501, 11601, 28801, 30601, 27901, 27801, 27401, 27501, 21901, 17801, 12601, 11101, 18801, 21101, மற்றும் 19001.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சர் | 14001 | 7,000,000 | 10,000,000 | 3,700,000 | 4,000,000 | - | - | 1 |
| 2. | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சர் | 18201 | 5,000,000 | 8,000,000 | 1,100,000 | 4,100,000 | - | - | 2 |
| 3. | பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் | 10501 | 140,000,000 | 170,000,000 | 60,000,000 | 90,000,000 | - | - | 3 |
| 4. | நீதி மன்றங்களின் நிருவாகம் | 22801 | 260,420,000 | 290,420,000 | 170,000,000 | 175,000,000 | 850,000,000 | 1,100,000,000 | 4 |
| 5. | தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | 20801 | 9,000,000 | 12,000,000 | - | - | - | - | 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | மாவட்டச் செயலகம், மொனராகலை | 27701 | - | - | 25,000,000 | 24,000,000 | - | - | 6 |
| 7. | புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 30301 | - | - | 3,000,000 | 2,900,000 | - | - | 7 |
| 8. | மாவட்டச் செயலகம்/ கச்சேரி, மட்டக்களப்பு | 26901 | - | - | 23,000,000 | 18,000,000 | 90,000,000 | 100,000,000 | 8 |
| 9. | மாவட்டச் செயலகம்/ கச்சேரி, அம்பாறை | 27001 | - | - | 35,000,000 | 30,000,000 | - | - | 9 |
| 10. | மாவட்டச் செயலகம், குருணாகல் | 27201 | - | - | 75,000,000 | 65,000,000 | - | - | 10 |
| 11. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 24201 | - | - | 2,000,000 | 1,700,000 | - | - | 11 |
| 12. | காணி ஆணையாளர் நாயகம் | 28601 | - | - | 12,000,000 | 11,500,000 | - | - | 12 |
| 13. | நிதி, திட்டமிடல் அமைச்சர் | 10201 | 15,000,000 | 12,000,000 | 9,500,000 | 8,500,000 | - | - | 13 |
| 14. | மாவட்டச் செயலகம், கம்பஹா | 25601 | - | - | 56,000,000 | 53,000,000 | - | - | 14 |
| 15. | மாவட்டச் செயலகம், கண்டி | 25801 | - | - | 51,000,000 | 46,000,000 | - | - | 15 |
| 16. | நீர்ப்பாசனத் திணைக்களம் | 28201 | - | - | 100,000,000 | 97,000,000 | - | - | 16 |
| 17. | கமத்தொழில் திணைக்களம் | 28501 | - | - | 150,000,000 | 120,000,000 | - | - | 17 |
| 18. | கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் | 11601 | 6,000,000 | 7,500,000 | - | - | - | - | 18 |
| 19. | நில அளவையாளர் திணைக்களம் | 28801 | - | - | 100,000,000 | 86,000,000 | - | - | 19 |
| 20. | இலங்கை புகையிரதத் திணைக்களம் | 30601 | - | - | 385,000,000 | 290,000,000 | - | - | 20 |
| 21. | மாவட்டச் செயலகம், கேகாலை | 27901 | - | - | 30,000,000 | 26,000,000 | - | - | 21 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22. | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி | 27801 | - | - | 38,000,000 | 32,000,000 | - | - | 22 |
| 23. | மாவட்டச் செயலகம், அநுராதபுரம் | 27401 | - | - | 40,000,000 | 35,000,000 | - | - | 23 |
| 24. | மாவட்டச் செயலகம், பொலன்னறுவை | 27501 | - | - | 18,000,000 | 15,000,000 | - | - | 24 |
| 25. | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் | 21901 | 8,000,000 | 8,011,000 | - | - | - | - | 25 |
| 26. | தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் | 17801 | 4,000,000 | 5,000,000 | - | - | - | - | 26 |
| 27. | கல்வி அமைச்சர் | 12601 | - | - | 680,000,000 | 675,000,000 | - | - | 27 |
| 28. | சுகாதார அமைச்சர் | 11101 | - | - | 710,000,000 | 653,000,000 | - | - | 28 |
| 29. | தாவரவியல் பூங்கா மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சர் | 18801 | 2,000,000 | 2,060,110 | - | - | - | - | 29 |
| 30. | அரசாங்க அச்சாளர் திணைக்கம் | 21101 | - | - | 45,000,000 | 44,000,000 | - | - | 30 |
| 31. | சட்டமும் ஒழுங்கும் அமைச்சர் | 19001 | - | - | 83,000,000 | 60,000,000 | - | - | 31 |
| | மொத்தம் | | 456,420,000 | 524,991,110 | 2,905,300,000 | 2,666,700,000 | 940,000,000 | 1,200,000,000 | |

2015 .09.14
கொழும்பு - 01.

ஒப்பம்: ரவி கருணாநாயக்க
நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*** *அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.***